**மாவட்ட உரிமையியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிங்கம்புணரி**
**அசல் வழக்கு எண். 224 /2019 பி.வா.சா.1**

2026–ம் ஆண்டு மார்ச் திங்கள் 22–ம் நாள் செவ்வாய்கிழமை–ன் வாக்குமூலம் 1857 ம் ஆண்டு சட்டப்பிரிவு17(1)(அ)ன் படி ஆணை உறுதி செய்துவைக்கப்பட்டது.

பெயர்: பாண்டியம்மாள் தந்தை பெயர்: சந்திரன்

---

**24.03.2026**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. தாவாச் சொத்தின் சர்வே எண் ஞாபகமில்லை. தாவாச் சொத்து எனக்கு பூர்வீக பாத்தியமாகும். தாவாச் சொத்தின் நான்குமால் வடக்கே வசந்தா , தெற்கே, கிழக்கே, மேற்கே எனது சொத்து உள்ளது . தெற்கு சொத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். ராமன் சேர்வை எனது அப்பாவழி தாத்தா ஆவார் . ராமன் சேர்வைக்கு இரண்டு பிள்ளைகள். எனது அப்பா திருமலை ஆவார்.

2. எனது அப்பாவிற்கு ஒரு மனைவி உள்ளார். நான் ஒரே வாரிசு ஆவேன். எனது அப்பாவின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை . எனது அம்மா பெயர் அம்மாக்கண்ணு ஆகும் . எனது பெற்றோருக்கு ஒரே வாரிசு என்பதற்கு வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. வாதி காயாம்பு எனது உறவினர் அல்ல . இருவரும் ஒரே சமூகத்தினர் அல்ல . தாவா இடம் எனக்கு சொந்தம் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

3. தாவாச் சொத்தில் 5 ½ செண்டை நான் கிரையம் பெற்றேன் . வா.சா.ஆ–1 ல் உள்ள கையொப்பம் எனது கையொப்பம் கிடையாது . வசந்தாவிற்கு கொடுத்த கிரையப்பத்திரத்தில் நான் கையொப்பம் செய்துள்ளேன் . அந்த கிரையப்பத்திரத்தில் பூர்வீகச் சொத்து என்று எழுதிக்கொடுத்துள்ளேனா என்றால் அது தனிச் சொத்தாகும் . மேற்படி பத்திரத்தில் பட்டா எண் 570 கூட்டு பட்டா என்று எழுதிக்கொடுத்தேனா என்றால் சரிதான்.

4.வசந்தாவிற்கு ரூ . 16,200/–க்கு கிரையம் கொடுத்தேன் என்றால் சரிதான் . அதில் என் பங்கிற்கு ஒதுக்கிய சொத்து என்று கிரையம் கொடுத்துள்ளேன் . மேற்படி பத்திரத்தில் 8 செண்டு என் பங்கில் 5 ½ செண்டை கிரையம் கொடுக்கிறேன் என்று கிரையம் ஏற்பட்டுள்ளது என்றால் தெரியாது . மேற்படி விவரத்தை தேவகோட்டை கோட்டாட்சியரிடம் பட்டாக்கு மனு கொடுக்கும் போது சொல்லியுள்ளேன் என்றால் எனது கணவருக்கு தான் தெரியும். எனது எதிர் வழக்குரையில் 5 ½ செண்டை கிரையம்

கொடுத்ததை சொல்லியுள்ளேனா என்றால் தெரியாது . எனது கணவருக்கு தான் தெரியும். மேற்படி விவரங்களை எதிர் வழக்குரையில் கோட்டாட்சியரிடம் கொடுத்த மனுவில் சொல்லாமல் தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பட்டா எண் 570 ல் எனது பெயர், வாதி பெயரில் கூட்டு பட்டா ஏற்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

5. தாவாச்சொத்தில் மொத்த விஸ்தீரணம் 16 ½ செண்டு என்றால் தெரியாது.எனது கணவருக்கு தான் தெரியும் . கூட்டு பட்டா படி மூவருக்கும் 5 ½ சென்டு என்றால் சரியல்ல. எனது 5 ½ செண்டை 2008 கிரையம் கொடுத்துவிட்டேன் என்றாலும் 2008 வாதி பெயருக்கு பட்டா இருக்கும் விவரம் தெரியும் என்றாலும் சட்ட காலம் கடந்து நுதனபாத்தியம் கொண்டாட வேண்டி பொய்யாக வழக்கு நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல.

6. தாவாச் சொத்தின் சர்வே எண் 24/5 என்றால் தெரியாது. நான் கிரையம் கொடுத்த பிறகு சர்வே எண் 24/5 ஏ உட்பிரிவு செய்யப்பட்டது என்றாலும் அது வசந்ததா பெயருக்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டது என்றாலும் தெரியாது . நான் விற்பனை செய்த 5 செண்டு, அது போக 11 செண்டு பூமியில் தனித்தனியாக உள்ளது. எனது பங்கு பாகத்தை 2008 கிரையம் செய்து கொடுத்ததால் தாவாச் சொத்தில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல . தாவாச் சொத்தில் பாத்திய உரிமை இல்லாததால் உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல.

7. தாவாச் சொத்து சர்வே எண் 24/5 பி என்றால் அதற்கு பட்டா என் பெயரில் இல்லை என்றாலும் சரியல்ல. வழக்கு நடவடிக்கைகள் அனைத்து எனது அண்ணன் முத்துராமனுக்கு தான் தெரியும் என்றாலும் , எஸ்.எஸ். கோட்டை ஊராட்சி மன்ற தலைவர் என்ற அடிப்படையில் தவறான அடிப்படையில் பட்டா எனது பெயரில் மாற்றியுள்ளார் என்றால் சரியல்ல . எதிர் வழக்குரை , கோட்டாட்சியரிடம் தாக்கல் செய்துள்ள மனு, முதல் விசாரணை சாட்சியம் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல.